STC. No.314 /2025 PW1. போதுமணி

தேதி– 11.03.2026

எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன். தேங்காய் வியாபாரத்திற்கு எவ்வளவு காய்கள் வாங்கி விற்பனை செய்வேன் என்றால் 500 காய் வாங்கி சந்தையில் வைத்து விற்பனை செய்வேன். ஒரு நாளைக்கு ரூ.500 லிருந்து ரூ.1000 வரை லாபம் கிடைக்குமா என்றால் கிடைக்கும். இதைத்தவிர்த்து வேறு தொழில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நானும், எனது கணவரும் பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் 25 ஆண்டுகள் பிரிந்துள்ளோம். எனக்கு சொந்தமாக ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். அதைதவிரத்து வேறு இடம் இல்லை என்றால் சரிதான். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் எனக்கு 2 பெண் பிள்ளைகள் ஆகும்.

2) அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்விட்டேன் என்றால் சரிதான். எதிரிக்கு எனது எந்த மகளை திருமணம் செய்து கொடுத்தேன் என்றால் 2வது மகள் சத்தியபிரியாவை திருமணம் செய்து கொடுத்தேன். எதிரியும், எனது மகளும் எவ்வளவு காலம் பிரிந்து வருகிறார்கள் என்றால் 4 வருடமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். மேற்படி 4 வருடமாக எனது மகள் எனது வீட்டில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். எதிரி என்ன வேலை செய்து வருகிறார் என்றால் டாஸ்மார்க் கடையில் வேலை பார்க்கிறார். என்ன வேலை பார்க்கிறார் என்றால் எனக்கு தெரியாது. எனது மகளை திருமணம் செய்யும் போது எதிரி என்ன வேலை செய்தார் என்றால் அதே வேளை செய்தார். திருமணத்தின் போது எதிரி எங்கு குடியிருந்தார் என்றால் தேவாரத்தில் குடியிருந்தார்.

3) எனது மகளுக்கும், எதிரிக்கும் என்ன கருத்துவேறுபாடின் காரணமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் சந்தேகத்தின் காரணமாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள். எதிரியும், எனது மகளும் பிரிந்த காலத்திலிருந்து பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரியின் வீட்டிலிருந்து எனது மகள் பிரிந்து

வரும்போது அவரது பொருட்கள், பண்டபாத்திரங்கள் அனைத்தும் எடுத்து வந்தார் என்றால் இல்லை. எவ்வளவு ரூபாய்க்கு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ரூ.10 லட்சத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் நான் பணம் கொடுத்தேன் என்றால் 2018 ம் வருடத்தில் கொடுத்தேன், தேதி ஞாபகமில்லை. ஏதேனும் நோட்டில் மேற்படி விபரத்தை குறித்து வைத்துள்ளேனா என்றால் இல்லை.

4) நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் விபரம் எனது குடும்பத்தினரைத்தவிர வேறு யாருக்கு தெரியும் என்றால் இல்லை. ரூ.10 லட்சம் பணம் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் 3 வீடுகள் வாடகைக்கு விட்டு பணம் வைத்திருந்தேன், நகைகளை விற்று பணம் கொடுத்தேன். வீடுகளில் எவ்வளவு வாடகை வரும் என்றால் மாதம் ரூ.12 ஆயிரம் வரும். எனது வீட்டின் பரப்பளவு எவ்வளவு என்றால் 3 செண்ட் இடத்தில் 4 வீடுகள் கட்டியுள்ளேன். 10 ஆண்டுகளுக்கு முன்பு 3 செண்ட் இடத்தில் 4 வீடுகள் கட்டினால் ரூ.12 ஆயிரம் வாடகை வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

5) அந்த வீட்டை உதயம் பைனான்சிஸ் அஜிஸ்கான் என்பவருக்கு 2017 ஆண்டில் கிரைய பத்திரம் கொடுத்து மாண்புமிகு உத்தமபாளையம் சார்பு நீதிமன்றத்தில் அஜிஸ்கான் என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்த்தின் தொகை எவ்வளவு என்றால் ஞாபகமில்லை. நான் எனது வீட்டை கிரையம் செய்து கொடுக்கும் நிலைமையில் இருந்துள்ள பட்சத்தில் எதிரிக்கு ரூ.10 லட்சம் கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது மகள் பிரிந்த பின்பு எதிரியிடம் எத்தனை முறை சென்று பணம் கேட்டுள்ளேன் என்றால் ஒரு முறைசென்று கேட்டேன், PF பணம் வந்த பின்பு தருகிறேன் என்று கூறினார், பின்னர் எனது தெருவில் இருக்கும் நபர்களை வைத்து பணம் கேட்டேன்.

6) நான் பணம் கேட்க சென்றபோது எதிரி என்னை அடித்ததாக கூறப்படும் விபரம் சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் மாவட்ட கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன். காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு எதிரி காசோலை கொடுத்தாரா அல்லது அதற்கு முன்பு கொடுத்தாரா என்றால் அதற்கு முன்பே கொடுத்தார். (சாட்சி பின்னிட்டு புகார் கொடுத்த பின்பு 30.07.2025 தேதியன்று எதிரி காசோலை

கொடுத்ததாக கூறினார்.) எங்கு வைத்து காசோலை கொடுத்தார் என்றால் எனது வீட்டில் வைத்து காசோலை கொடுத்தார்.

7) எங்களுக்கும், எதிரிக்கு இடையே பிரச்சனை இருந்த சமயத்தில் நான் சொல்வது போல் எதிரி எனது வீட்டிற்கு வந்து காசோலை கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, எனது மகளுடன் தான் எதிரிக்கும் தான் பிரச்சனை, நான் எதிரியுடன் பேசிக்கொண்டுதான் இருந்தேன். எதிரி காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனக்கும், எதிரிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். எதிரி காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் யார், யார் எல்லாம் இருந்தார்கள் என்றால் எனது மகள், பேரன் இருந்தார்கள். காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதியன்று நான், எனது மகள் காவல்நிலையத்திற்கு விசாரணைக்காக சென்றோமா என்றால் இல்லை.

8) நான் கொடுத்த புகார் மனு சம்பந்தமாக என்ன பேசி முடிக்கப்பட்டது என்றால் முடிக்க வில்லை, விசாரணை நிலுவையில் உள்ளது. எதிரி காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எதிரி, என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை, நான் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் வழக்கறிஞர் அனுப்பிய பின்பு காசோலையை எடுத்து சென்றதாக கூறி எதிரி காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் போன் செய்து அழைத்தார்கள், நான் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கிறேன் என்று கூறிவிட்டேன்.

9) 30.07.2025 ம் தேதியில் எதிரி, என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், மேற்படி விபரத்தை தெரிந்து கொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகளின் கையொப்பம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி புகார் சம்பந்தமாக 04.08.2025 ம் தேதியன்று எனது சார்பாக எனது மகள் காவல்நிலையத்திற்கு சென்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அப்போது நான் என்ன மருத்துவமனையில் இருந்தேன் என்றால் உடல்நிலை சரியில்லாததால் தேனி தாமோதரன் மருத்துவமனையில் இருந்தேன். அந்த விசாரணையில் எதிரி என்னிடம் ரூ.5 லட்சம் பெற்றுள்ளதாகவும், அதனை நீதிமன்றத்தின் மூலம் பார்த்துக்கொள்வதாகவும், நீதிமன்றத்தில் மூலம் விவகாரத்து பெற்று தனது சீர்வரிசை பொருட்களை பெற்றுக்கொள்வதாகவும், குழந்தைகளின்

படிப்பிற்காக நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் வாங்கி கொள்வதாக கூறியிருக்கிறார் என்றால் தெரியாது.

10) எனது மகள் என்ன படித்துள்ளார் என்றால் 8ம் வகுப்பு படித்துள்ளார். எதிரி என்ன படித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. காசோலையை யார் பூர்த்தி செய்தார் என்றால் எதிரிதான் பூர்த்தி செய்து கொடுத்தார். எதிரி ஆங்கிலத்தில் கையொப்பம் செய்யும் பழக்கம் கிடையாது என்றும், தமிழில் தான் அவர் 10 ஆண்டு காலமாக கையொப்பம் செய்து வருகிறார் என்றும், காசோலையை எதிரி கையொப்பம் செய்து, பூர்த்தி செய்யவில்லை என்றால் சரியல்ல. காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் சமயத்தில் எங்களுக்குள் பிரச்சனை இருந்ததால் எதிரி காசோலை கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த ஏரியாவில் வீடு கட்டியுள்ளார் என்றால் உத்தமபாளையம் தாமஸ் காலனி வீடு கட்டியுள்ளார்.

11) எதிரி எப்போது வீடு கட்டினார் என்றால் 6,7 வருடங்கள் ஆகிறது. எந்த தேதியில் நான் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்தேன் என்றால் தெரியாது. நான் மருத்துவமனையிலிருந்து வந்த பிறகு காசோலையை தாக்கல் செய்தேனா அல்லது காசோலையை தாக்கல் செய்த பின்னர் மருத்துவமனையில் சேர்ந்தேனா என்றால் நான் மாதம், மாதம் மருத்துவமனைக்கு செக்கப்புக்காக செல்வேன். அப்போது காசோலையை தாக்கல் செய்து விட்டு சென்றேன். நான் மருத்துவமனையில் இருக்கும்போது தான் காசோலையை தவறாக பயன்படுத்தியதாக காவல்நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்தார்கள் என்றால் சரிதான்.

12) அதன் பின்னர் தான் எனது வழக்கறிஞருக்கு தகவல் கூறி எதிரிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரி என்னிடம் ரூ.10 லட்சம் பணம் வாங்கவில்லை என்றும், வழக்கிற்காக எதிரி பணம் வாங்கியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நகைகளை எங்கு விற்றேன் என்றால் சின்னமனூர் ஜெய்கிருஷ்ணா நகை கடையில் விற்றேன். எவ்வளவு நகைகளை விற்றேன் என்றால் ரூ.12 லட்சத்திற்கு நகை விற்பனை செய்து ரூ.10 லட்சம் எதிரிக்கு கொடுத்தேன். நான் நகை விற்பனை செய்த அன்றே எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்கிறேனா என்றால் சரிதான். நகைகளை விற்பனை செய்ததாக சொல்லும் ரசீதுகளை நீதிமன்றத்தில்

தாக்கல் செய்ய தயாரா என்றால் நகைகளை வங்கியிலிருந்து எடுத்ததற்கான ரசீதுகள் உள்ளது. விற்பனை செய்ததற்காக ரசீதுகள் தேடிப்பார்த்து தர தயார்.

13) எவ்வளவு பவுன் நகை விற்பனை செய்தேன் என்றால் தெரியாது. சின்னமனூர் ஜெயகிருஷ்ணா உரிமையாளரை விசாரணை செய்ய தயாரா என்றால் வேண்டாம். ரூ.12 லட்சம் விற்பனை செய்யும் அளவிற்கு என்னிடம் நகை இல்லை என்றும், ரூ.10 லட்சம் கொடுக்கும் அளவிற்கு என்னிடம் வருமானம் இல்லை என்றும், எதிரிக்கு பணம் கொடுத்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையிலும், புகார் மனுவிலும் எதிரியின் வீட்டின் சர்வே எண் குறிப்பிட்டுள்ளேன், மேற்படி சர்வே எண் என்ன என்றால் தெரியாது. எதிரியின் ஆவணங்கள் என்னிடம் உள்ளது என்றும், அதனை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தான் எனக்கு சர்வே எண். தெரியவில்லை என்றால் சரியல்ல.

14) என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் நான் ரூ.10 லட்சம் கொடுத்ததற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தேங்காய் வியாபாரத்திற்கு நான் எவ்வளவு முதலீடு செய்துள்ளேன் என்றால் ரூ.1000, 2000 க்கும் சிறிய தேங்காய் வாங்கி வியாபாரம் செய்கிறேன். எனக்கு காசோலை தொகை கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றும், எனது மகள் எதிரியிடம் இருந்து எடுத்து வந்த காசோலையை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.11 18:06:00 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam